முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2019

49 - இலக்கிய நயம் அரபு

புள்ளியிடும் திட்டம்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

புள்ளி வழங்கும் முறை

49 - இலக்கிய நயம் அறபு - க.பொ.த (சாதாரண தரம் - 2019)

இவ்வினாப் பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி 1 உம், பகுதி 11 உம் கட்டாய வினாக்களைக் கொண்டவை. எனவே பகுதி 1 இல் உள்ள இரு வினாக்களுக்கும் கட்டாயமாகவும் பகுதி 11 ல் உள்ள வினாவுக்கும் விடை எழுதப்படல் வேண்டும்.

பகுதி 111 இல் காணப்படும் நான்கு வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும். இதன்படி மொத்தம் ஏழு வினாக்களிலிருந்து ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

பகுதி 1 இலுள்ள முதலாம் வினா 20 புள்ளிகளைக் கொண்டது. இதன்படி 2 X 10 = 20 புள்ளிகள் வழங்கப்படும்.

இரண்டாவது வினா 25 புள்ளிகளுக்கானது. இதன்படி 5 X 5 = 25 புள்ளிகள் வழங்கப்படும்

பகுதி 11 இலுள்ள வினாவுக்கு மொத்தமாக 25 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். இதன்படி இவ்வினாவிற்கு 5 X 5 = 25 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

பகுதி 111 இலுள்ள நான்கு வினாக்களும் தலா 15 புள்ளிகளைக் கொண்டவை. அவற்றில் எவையேனும் இரு வினாக்களுக்கு விடை எழுதியிருப்பின் 15 X 2 = 30 புள்ளிகள் வழங்கப்படும்.

இதன்படி மொத்தமாக 45 + 25+ 30 = 100) புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

புள்ளி வழங்கும் முறை

49 - இலக்கிய நயம் அரபு - க.பொ.த (சாதாரண தரம்) 2019

பகுதி 1

1 ஆம் வினாவும் 2 ஆம் வினாவும் கட்டாயமானவை.

முதலாம் வினா - 2 X 10 = 20 புள்ளிகள்

இரண்டாம் வினா – 5 X 5 = 25 புள்ளிகள்

பகுதி 11

மூன்றாம் வினா கட்டாயமானது

மூன்றாம் வினா – 5 X 5 = 25 புள்ளிகள்

பகுதி 111

விரும்பிய இரு வினாக்களுக்கு மாத்திரம்

நான்காம் வினா -3 X 5 =15 புள்ளிகள்

ஐந்தாம் வினா -5 X 3 = 15 புள்ளிகள்

ஆறாம் வினா -5 X 3 = 15 புள்ளிகள்

ஏழாம் வினா -5 X 3 = 15 புள்ளிகள்

பகுதி 1 45 புள்ளிகள்

பகுதி 11 25 புள்ளிகள்

பகுதி 111 30 புள்ளிகள்

மொத்தம் 100 புள்ளிகள்

க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019
விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும்போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும்போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

உதாரணம் - வினா இல 03

(i) .... ✓ △ 4/5
....
....

(ii) .... ✓ △ 3/5
....
....

(iii) .... ✓ △ 3/5
....
....

(03)　(i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்கான புள்ளி வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** வினாப்பத்திரம் II இற்கான புள்ளி வினாப்பத்திரம் II இற்குரிய புள்ளி பட்டியலில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் **"Total Marks"** என்ற நிரலில் பதியவும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி **"Total Marks"** எனும் நிரலில் பதிதல் வேண்டும்.

முக்கியக் குறிப்பு :
சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் பதியப்படலாகாது.**

விடைத்தாள் பரீட்சகர்களின் பயன்பாட்டிற்காக

8520

OL/2019/49-STE

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

49 STE

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2019

අරාබි සාහිත්‍ය රසාස්වාදය I, II
அரபு இலக்கிய நயம் I, II
Appreciation of Arabic Literary Texts I, II

10.12.2019 / 1300 - 1610

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

අමතර කියවීම් කාලය ප්‍රශ්න පත්‍රය කියවා ප්‍රශ්න තෝරා ගැනීමටත් පිළිතුරු ලිවීමේදී ප්‍රමුඛත්වය දෙන ප්‍රශ්න සංවිධානය කර ගැනීමටත් යොදාගන්න.
வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.
Use additional reading time to go through the question paper, select the questions and decide on the questions that you give priority in answering.

- ✻ I වන කොටසේ ප්‍රශ්න **දෙක ම ද** II වන කොටසේ ප්‍රශ්නය ද III කොටසේ ඕනෑ ම ප්‍රශ්න **දෙකක් ද** ඇතුළු ව ප්‍රශ්න **පහකට** පමණක් පිළිතුරු සපයන්න.
- ✻ பகுதி I இலுள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இலுள்ள ஒரு வினாவுக்கும் பகுதி III இலுள்ள எவையேனும் இரு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✻ *Answer five questions only, including both questions in Part* **I** *, the question in Part* **II** *and any two questions from Part* **III**.

I කොටස / பகுதி I / Part I

(ප්‍රශ්න **දෙකට ම** පිළිතුරු සපයන්න.)
(இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.)
(Answer **both** questions.)

1. පහත සඳහන් ප්‍රශ්නවලට කෙටි පිළිතුරු ලියන්න.
பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.
Write short answers to the following questions.

(i) අරාබි සාහිත්‍යය යන්නෙන් අදහස් කරන්නේ කුමක් ද?
அரபு இலக்கியம் என்றால் என்ன?
What is meant by Arabic literature?

(ii) අරාබි සාහිත්‍යය විවිධ කාණ්ඩවලින් සමන්විත වේ. ඒවායින්
அரபு இலக்கியம் பல வடிவங்களைக் கொண்டது. அவற்றுள்,
Arabic literature consists of different categories. From those

(a) الفخر අදහස් කරන්නේ කුමක් ද?
என்றால் என்ன?
what is meant by?

(b) الغزل අදහස් කරන්නේ කුමක් ද?
என்றால் என்ன?
what is meant by?

[2 පිටුව බලන්න. / பக். 2 ஐப் பார்க்க. / See page 2.

(iii)

أَفْتَرَىٰ عَلَى اللَّهِ كَذِبًا أَم بِهِ جِنَّةٌ ۗ

ثُمَّ جَاءَهُم مَّا كَانُوا يُوعَدُونَ

ඉහත වාක්‍යවල යටින් ඉරි ඇඳ ඇති වචනවල තජ්වීද් නීති සඳහන් කරන්න.

மேற்படி வசனங்களில் கோடிட்டப்பட்டுள்ள இடங்களில் இடம்பெறக்கூடிய தஜ்வீத் சட்டங்களைக் குறிப்பிடுக.

Mention the Thajweed laws of the underlined words of the above verses.

(iv) පහත දැක්වෙන 'දුආ' සම්පූර්ණ කර එය කියවන අවස්ථාව සඳහන් කරන්න.

பின்வரும் துஆவைப் பூரணப்படுத்தி அது ஓதப்படும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

Complete the following 'Dua' and mention the occasion it is recited.

أعظم الله ....وأحسن................وغفر لميتك

(v)

كلما أدبني الدهر   أراني نقص عقلي

واذا ما ازددت علما   زادني علما بجهلي

(a) ඉහත සඳහන් කවිය කවුරුන් විසින් කියන ලද්දක් ද?

மேற்படி கவிதை யாரால் பாடப்பட்டது?

By whom was the above poem recited?

(b) ඉහත කාව්‍යයේ තේරුම සිංහල භාෂාවෙන් ලියන්න.

மேற்படி கவிதையின் கருத்தைத் தமிழ் மொழியில் எழுதுக.

Write the meaning of the above poem in English language.

(vi) "කල දුටු කල වළ ඉහ ගැනීම" යන සිංහල ප්‍රස්තා පිරුළට සමාන අරාබි ප්‍රස්ථා පිරුළ ලියන්න.

"காற்றுள்ள போது தூற்றிக் கொள்" எனும் பழமொழிக்கு ஒத்த பொருளைத் தரும் அறபுப் பழமொழியைக் குறிப்பிடுக.

Write the Arabic proverb similar to English proverb "Make hey while the sun shines".

(vii) 'A' තීරුවේ සාහිත්‍ය ග්‍රන්ථ කිපයක් අඩංගු වන අතර 'B' තීරුවේ එම සාහිත්‍ය ග්‍රන්ථවලට අදාළ ක්ෂේත්‍ර අපිළිවෙළින් අඩංගු වී ඇත. 'A' තීරුවට අනුව 'B' තීරුව නිවැරදි අනුපිළිවෙළට ලියා දක්වන්න.

'A' நிரலில் சில இலக்கியங்களும் 'B' நிரலில் குறித்த இலக்கியங்களோடு தொடர்புபட்ட துறைகளும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. 'A' நிரலுக்குப் பொருந்துகின்ற வகையில் 'B' நிரலை ஒழுங்குபடுத்தி எழுதுக.

Column 'A' consists of some literature texts and column 'B' consists the related fields of these literature texts disorderly. Write the correct order of column 'B' according to the Column 'A'.

A	B
මදීනතු නුහාස් மதீனது நுஹாஸ் Madinathu Nuhas	නීතිය සම්බන්ධ පොත சட்ட நூல் Law related book
පත්හුද් දයියාන් பத்ஹுத் தையான் Fathud Dhayyan	දර්ශනය සම්බන්ධ පොත மெய்ஞான நூல் Philosophy related Book
නූර් මසාලා நூறு மஸாலா Noor Masala	නවකතාව நாவல் Novel
ශම්සුල් මඃරිෆා சம்சுல் மஃரிபா Shamsul Ma'rifa	කවි ශෛලියේ සාහිත්‍යය கவிதை நடை இலக்கியம் Poetry Style Literature

[3 පිටුව බලන්න. / பக். 3 ஐப் பார்க்க. / See page 3.

(viii) පහත දැක්වෙන අරාබි-දෙමළ පද සිංහල භාෂාවෙන් ලියන්න.
பின்வரும் அறபுத் தமிழ் அடிகளைத் தமிழ் மொழியில் எழுதுக.
Write the following Arabic-Tamil verses in English language.

شوريتم شنترنم شلم أفلاكنيتم

وارانم بحر ثوم واضتتمعكض فاطمتي

(ix) ආගන්තුකයා විසින් ආගන්තුක සත්කාර කරන්නාට කියන ලද දුආ අරාබි බසින් ලියන්න.
விருந்தளித்தவருக்கு, விருந்துண்டவர் ஓதும் துஆவை அறபு மொழியில் எழுதுக.
Write the Dua recited by the guest to the hosts in Arabic.

(x) 'සබ්උල් මුඅල්ලකාත්' යන්නෙන් අදහස් කරන්නේ කුමක් ද?
'ஸப்உல் முஅல்லகாத்' என்பது எதனைக் குறிக்கிறது?
What is meant by 'Sabul Muallaqath?'

(02 × 10 = 20 Marks)

2. පහත දී ඇති 'අල්-කුර්ආන්' වාක්‍ය ආශ්‍රයෙන් අසා ඇති ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
கீழ் தரப்பட்டுள்ள அல்-குர்ஆன் வசனங்களை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.
Write answers to the following questions in relation to the verses of 'Al-Quran' given below.

ألم تر كيف فعل ربك بأصحاب الفيل (1) ألم يجعل كيدهم في تضليل (2) وأرسل عليهم

طيرا أبابيل (3) ترميهم بحجارة من سجيل (4) فجعلهم كعصف مأكول (5)

(i) ඉහත සඳහන් අල්-කුරාන් වැකි සිංහල භාෂාවට පරිවර්තනය කරන්න.
மேற்படி அல்-குர்ஆன் வசனங்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்க்குக.
Translate the above verses of Al-Quran into English language.

(ii) ඉහත සඳහන් අල්-කුර්ආන් වැකි පහළවීමට අදාළ පසුබිම විස්තර කරන්න.
மேற்படி அல்-குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டமைக்கான பின்னணியை விவரிக்குக.
Describe the background of the revelation of the above verses of Al- Quran.

(iii) ඉහත සඳහන් අල්-කුර්ආන් වැකිවල ඇති සාහිත්‍යමය අගය පැහැදිලි කරන්න.
மேற்படி அல்-குர்ஆன் வசனங்களில் காணப்படும் இலக்கிய நயத்தை விளக்குக.
Explain the literary value of the above verses of Al-Quran.

(iv) ඉහත සඳහන් අල්-කුර්ආන් වැකිවල යටින් ඉරි ඇඳි වාක්‍ය ඛණ්ඩවල තජ්වීද් නීති පැහැදිලි කරන්න.
மேற்படி அல்-குர்ஆன் வசனங்களில் கோடிடப்பட்டுள்ள சொற்றொடர்களின் தஜ்வீத் சட்டங்களை விளக்குக.
Explain the Thajweed laws of the underlined phrases of the above Al-Quran verses.

(v) ඉහත සඳහන් අල්-කුර්ආන් වාක්‍ය පෙන්වා දෙන ඉගැන්වීම් **දෙකක්** සඳහන් කරන්න.
மேற்படி அல்-குர்ஆன் வசனங்கள் தரும் படிப்பினைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
Mention **two** teachings of the above verses of Al-Quran shown.

(05 × 05 = 25 Marks)

[4 පිටුව බලන්න. / பக். 4 ஐப் பார்க்க. / See page 4.

II කොටස / பகுதி II / Part II

(පහත සඳහන් ප්‍රශ්නයට පිළිතුරු සපයන්න.)
(பின்வரும் வினாவுக்கு விடை எழுதுக.)
(Answer the following quesion.)

3. පහත සඳහන් කාව්‍යය (A) සහ ඡේදය (B) කියවා අසන ලද ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
பின்வரும் கவிதையையும் (A), உரைப்பகுதியையும் (B) வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.
Read the following poem (A) and the passage (B) and answer the questions.

(A)

إن سألتني عن إلهي فهو رحمن رحيم
إن سألتني عن نبي فهو إنسان عظيم
إن سألتني عن كتابي فهو قرآن كريم
إن سألتني عن عدوي فهو شيطان رجيم
إن سألتني عن ابى فهو رجل مجتهد
إن سألتني عن صديقي فهو انيس ذوأخلاق

(i) ඉහත කවිය සිංහල භාෂාවට පරිවර්තනය කරන්න.
மேற்படி கவிதையை தமிழ் மொழியில் மொழிபெயர்க்குக.
Translate the above poem into English language.

(ii) ඉහත කවියේ සාහිත්‍යමය අගය පැහැදිලි කරන්න.
மேற்படி கவிதையில் காணப்படும் இலக்கிய நயத்தை விளக்குக.
Explain the literary value of the above poem.

(B)

ذات يوم خرج أعرابي متجها الى مكة للحج، وكان لا يملك جملا، فطال به السفر وتعب جسمه وتمزق حذائه فسار حافيا، وألهبت رمال الصحراء قدميه، فضاق صدره ،وسخت من نفسه، ونسي نعم ربه بكثيرة عليه وأخذ يندب حظه إذا حرم من مال يشتري به جملا يركبه في سفره الطويل وعندما وصل إلى مكة، كانت نفسه ملآنة بالضيق. وما إن دخل قرب الكعبة، حتى رأى على بابها رجلا ميتور الساقين، لا يستطيع أن يتحرك، يسأل الناس إحسانا عندئذ أفاق الأعرابي مما هو فيه و رجع إلى عقله وهو يقول ربي اعف عني . لقد نسيت وكان يجب ألا أنسى أنك أنت الذي خلقتني ورزقتني ومنحتني القوة، وأعطيتني السمع والبصر اغفر لي يا رباه.

(i) ඉහත ඡේදයේ සාරාංශය ලියන්න.
மேற்படி உரைப்பகுதியின் சுருக்கத்தை எழுதுக.
Write the summary of the above paragraph.

[5 පිටුව බලන්න. / பக். 5 ஐப் பார்க்க. / See page 5.

(ii) ඉහත ඡේදය පෙන්වා දෙන ඉගැන්වීම සඳහන් කරන්න.
மேற்படி உரைப்பகுதி உணர்த்தும் படிப்பினையைக் குறிப்பிடுக.
Mention the lesson to be realized in the above paragraph.

(iii) මෙම ඡේදය සඳහා සුදුසු මාතෘකාවක් ලියන්න.
மேற்படி உரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பொன்றை இடுக.
Write a suitable heading for this paragraph. (05 × 05 = 25 Marks)

III කොටස / பகுதி III / Part III

(ඕනෑම ප්‍රශ්න **දෙකකට** පමණක් පිළිතුරු සපයන්න.)
(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)
(Answer any **two** questions.)

4. අරාබි ප්‍රස්තා පිරුළු ඇසුරෙන්, පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
அறபுப் பழமொழிகளுடன் தொடர்புபடுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
Answer the following questions using Arabic proverbs.

(i) مقتل الرجل بين فكيه

මෙම ප්‍රස්තා පිරුළ සිංහල භාෂාවට පරිවර්තනය කරන්න.
இப்பழமொழியை தமிழ் மொழியில் மொழிபெயர்க்குக.
Translate this proverb into English language.

(ii) كما تزرع تحصد

මෙම අරාබි ප්‍රස්තා පිරුළට සමාන සිංහල ප්‍රස්තා පිරුළක් ලියන්න.
இப்பழமொழிக்கு ஒத்ததான தமிழ்ப் பழமொழி ஒன்றைக் குறிப்பிடுக.
Write an English proverb similar to this Arabic proverb.

(iii) لكل جواد كبوة

මෙම ප්‍රස්තා පිරුළෙහි අර්ථය අරාබි භාෂාවෙන් ලියන්න.
மேற்படி அறபுப் பழமொழியின் கருத்தை அறபு மொழியில் எழுதுக.
Write the meaning of this proverb in Arabic language.

(iv) නබීල් හා කාමිල් ඔහුගේ මිත්‍රයා ආදිල් හමු වීම සඳහා ඔහුගේ නිවසට ගියේ ය. එනමුත් ආදිල් නිවසේ නොසිටි අතර නිවස තුළට විත් වාඩිවීමට ආරාධනාව ලැබිණි. ඔවුන් සුහදව කතා කරමින් සිටින අතරතුර කුස්සියේ අමුත්තන්ට ආහාර පිසින හඬක් ඇසිනි. බොහෝ වේලාවක් රැඳී සිටිය මුත් ආහාර හෝ ජලය වීදුරුවක් හෝ නොලැබීම ඔවුන්ගේ කලකිරීමට හේතු විය. ඔවුන් දෙදෙනාම කණගාටුවට පත් වූහ. මෙම සිදුවීමට අදාළ අරාබි ප්‍රස්ථා පිරුළ ලියන්න.

நபீலும் காமிலும் அவர்களது நண்பன் ஆதிலைச் சந்திக்க அவனது வீட்டுக்குச் சென்றனர். இருப்பினும் வீட்டில் ஆதில் இல்லாதிருந்ததுடன் அவர்கள் வீட்டுக்குள் வந்து அமருமாறு அழைக்கப்பட்டனர். அவர்கள் நட்புறவாகக் கலந்துரையாடிக் கொண்டிருக்கையில் சமயலறையில் விருந்தினர்களுக்கான உணவு சமைக்கும் சத்தம் கேட்டது. நீண்ட நேரம் காத்திருந்தபோதிலும், உணவோ அல்லது ஒரு கிளாஸ் தண்ணீரோ கிடைக்காமை அவர்களது மனவுளைச்சலுக்கு காரணமானது. அவர்கள் இருவரும் கவலையடைந்தனர். இந்நிகழ்வுக்குப் பொருத்தமான அறபுப் பழமொழியை எழுதுக.

Nabeel and Kamil went to meet their friend Adhil at his home. Although Adhil was not in, his friends were invited to be seated in the house. While they were talking to each other in a friendly manner, they heard the sound of cooking in the kitchen, apparently preparing food for the guests. To their dismay even after a long stay they were neither offered food nor a cup of plain water. They both felt sad. Write the Arabic proverb relevant to this incident.

[6 වැනි පිටුව බලන්න. / பக். 6 ஐப் பார்க்க. / See page 6.

(v) රියදුරු බලපත්‍රය ලබාගැනීම සඳහා සියාම් විසින් උත්සාහ කරන ලද අනුගාමී අවස්ථා දෙකේදී ම ඔහු අසමත් විය. ඔහුගේ මිතුරන් මෙම පුවත ඇසූ විට ඔවුන්ට මහත් දුකක් දැනුණු අතර ඔහුව සනසවන ලදී. සිදු වූ දේ පිළිබඳව කණගාටු වීමට කිසිවක් නොමැති බවත්, නැවත වරක් උත්සාහ කරන ලෙසත් ඔහුගේ මිතුරා හෂීම්, ඔහු වෙත පෞද්ගලිකව පැමිණ උපදෙස් ලබා දුන්නේ ය. දෙවන හා තුන්වන උත්සාහය තුළ මිනිසුන් සාර්ථක වන බවත්, දැඩි අධිෂ්ඨානයකින් යුතුව තවත් වරක් උත්සාහ කරන ලෙසත් ඔහු තවදුරටත් උපදෙස් දුන්නේ ය. අවසානයේ දී ඔහු සාර්ථකව විභාගය අවසන් කළ අතර රියදුරු බලපත්‍රය ලබාගැනීමට සමත් වූවේ ය. මෙම සිදුවීමට අදාළ අරාබි ප්‍රස්ථා පිරුළ ලියන්න.

சியாமினல் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக முயற்சி செய்யப்பட்ட அடுத்தடுத்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவன் சித்தியடையத் தவறினான் அவனது நண்பர்கள் இந்தத் தகவலைக் கேட்டபோது அவர்கள் மிகக் கவலையடைந்ததுடன் அவனுக்கு ஆறுதல் கூறினர். நடந்த விடயம் தொடர்பில் கவலையடைவதற்கு ஏதுமில்லை என்றும், மீண்டுமொரு முறை முயற்சிக்குமாறும் அவனது நண்பன் ஹாஷிம், தனிப்பட்ட ரீதியில் அவனை வந்து சந்தித்து அறிவுரை கூறினான். இரண்டாம் மூன்றாம் முயற்சிகளில் மனிதர்கள் வெற்றியடைவதாகவும், தீவிர முயற்சியுடன் மீண்டுமொரு தடவை முயற்சி செய்யுமாறும் அவன் மேலும் அறிவுரை வழங்கினான். இறுதியில் அவன் வெற்றிகரமாக பரீட்சையை நிறைவு செய்ததுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டான். இச் சம்பவத்திற்குப் பொருத்தமான அறபுப் பழமொழியை எழுதுக.

Siyam had failed in two consecutive attempts at the written examination to obtain the driving license. When his friends heard this news, they felt very sad and they consoled him. His friend Hashim approached him personally advised him that there was nothing to worry about what happened and to make another attempt. He also said that people succeed during their 2nd or 3rd attempt and further advised him to try another attempt with great determination. Finally, he succeeded in his exam and was able to obtain the driving license. Write the suitable Arabic proverb relevant to this incident.

(03 × 05 = 15 Marks)

5. පහත සඳහන් හදීසය කියවා අසන ලද ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
பின்வரும் ஹதீஸை வாசித்து கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.
Read the following Hadith and answer the questions below.

مثل الجليس الصالح كمثل صاحب المسك ان لم يصبك منه شيئ اصابك من ريحه ومثل الجليس السوء كمثل صاحب الكير ان لم يصبك منه سواده اصابك من دخانه

(i) ඉහත හදීස් පෙන්වන මූලික ඉගැන්වීම සඳහන් කරන්න.
இந்த ஹதீஸ் உணர்த்தும் பிரதான போதனையைக் குறிப்பிடுக.
Mention the prime teaching of the above Hadith.

(ii) මෙම හදීසයේ යටින් ඉරි ඇඳ ඇති වචනවල තේරුම ලියන්න.
மேற்படி ஹதீஸில் கோடிடப்பட்டுள்ள சொற்களின் பொருளைத் தருக.
Write the meaning of the underlined words of the above Hadith.

(iii) මෙම හදීසයේ දක්නට ඇති උපමාව, උපමේය, පොදු ගුණාංග යනාදිය සඳහන් කරන්න.
இந்த ஹதீஸில் காணப்படும் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைக் குறிப்பிடுக.
Mention the simile, comparison and common characteristics in this Hadith.

(05 × 03 = 15 Marks)

[7 පිටුව බලන්න. / பக். 7 ஐப் பார்க்க. / See page 7.

6. පහත සඳහන් දුආ කියවා අසන ලද ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
பின்வரும் துஆக்களை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.
Read the following Duas and answer the questions given below.

السلام عليكم أهل الديار من المؤمنين والمسلمين وإنا إن شاء الله بكم لاحقون

اللهم لا سهل إلا ما جعلته سهلا وأنت تجعل الحزن إذا شئت سهلا

اللهم رب هذه الدعوة التامة، والصلاة القائمة، آت محمدًا الوسيلة والفضيلة، وابعثه مقامًا محمودًا الذي وعدته إنك لا تخلف الميعاد

(i) ඉහත ඕනෑම දුආ **දෙකක්** සිංහල භාෂාවට පරිවර්තනය කරන්න.
மேலுள்ளவற்றுள் ஏதேனும் **இரண்டு** துஆக்களை தமிழ் மொழியில் மொழிபெயர்க்குக.
Translate any **two** of the above Duas into English language.

(ii) ඉහත ඕනෑම දුආ **දෙකක්** පාරායනය කරන අවස්ථා සඳහන් කරන්න.
மேலுள்ளவற்றுள் ஏதேனும் **இரு** துஆக்கள் ஓதப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
Mention the occasions in which **two** of the above Duas are recited.

(iii) ඉහත දුආ **එකක** සාහිත්‍යමය අගය පැහැදිලි කරන්න.
மேலுள்ளவற்றுள் ஏதேனும் ஒரு துஆவில் காணப்படும் இலக்கிய நயத்தை விளக்குக.
Explain the literary value of one of the above Duas. (05 × 03 = 15 Marks)

7. පහත සඳහන් ඒවායින් **තුනකට** කෙටි සටහන් ලියන්න. (iv) සහ (v) යන මාතෘකා තෝරාගන්නේ නම් **අරාබි භාෂාවෙන් පමණක්** කෙටි සටහන් ලියන්න.
பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றுக்கு** சிறு குறிப்பு எழுதுக. (iv), (v) ஆகிய தலைப்புகளைத் தெரிவு செய்தால் **அறபு மொழியில்** மாத்திரம் எழுதுக.
Write short notes on any **three** of the following. If you select the topics (iv) and (v) write short notes in **Arabic language only**.

(i) නූතන යුගයේ අරාබි සාහිත්‍යය
நவீனகால அறபு இலக்கியம்
Arabic Literature in the Modern Period

(ii) මක්කි, මදනි වෙනස්කම්
மக்கி, மதனி வேறுபாடுகள்
Differences of Makki, Madani Suras

(iii) අරාබි - දෙමළ සාහිත්‍යය
அறபுத்தமிழ் இலக்கியம்
Arabic-Tamil literature

(iv) إعجاز القران

(v) الحديث النبوي

(05 × 03 = 15 Marks)

* * *

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை 2019 டிசம்பர்

அறபு இலக்கிய நயம் - 49

புள்ளியிடும் திட்டம்

பகுதி 1

(01) சுருக்க விடை

01-
அரபு மொழியைப் பேசும் அரபு சமூகத்தினருக்குரிய அரபு மொழியில் அமைந்த இலக்கியமே அரபு இலக்கியமாகும். இதில் கதைகள், கவிதை, உரைநடை, நாடகம், பாடல்கள், இலக்கிய விமர்சனங்கள், பழமொழிகள் முதலிய அனைத்தும் உள்ளடங்கும்.

(2புள்ளிகள்)

02-
a- "அல்-பக்ரு -الفخر" என்பது தற்புகழ்ச்சி, சுய பெருமைக் கவிதைகள் ஆகும். இவை (வீரம், கொடை, நாணயம், குலப்பெருமை, அபயமளித்தல், விருந்தோம்பல் போன்ற விடயங்களை மையப்படுத்திப் பெருமை, புகழ்ச்சி எதிர்பார்த்துப் பாடப்பட்டவைகளாக அமைந்திருக்கும்.

b-"அல்-கஸ்ல் - الغزل" என்பது காதற்பாக்கள். காதலர்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்துதல், காதற் காட்சிகளை நினைவுபடுத்துதல், நீண்ட நாள் பிரிவுத் துயரை வெளிப்படுத்துதல், காதல் அன்பை பரிமாறல், பிரிந்திருந்து, சேர்ந்து புளகாங்கிதமடைதல். போன்றன கருப் பொருளாக அமையும்.

(1x2=2 புள்ளிகள்)

03-
- "أم به" என்பதில் "الإخفاء الشفوي - இக்பா ஷபவிய்யு" சட்டம் அமையும். ஸுகூன் செய்யப்பட்ட மீமைத் தொடர்ந்து "பா, ب"வந்தால் இருமாத்திரை அளவு உன்னாவுடன் (الغنة) ஓதுவது "الإخفاء الشفوي இக்பா ஷபவிய்யு" ஆகும்.

- "هم ما كانوا" என்பதில் இத்காம் ஷபவிய்யு சட்டம் அடங்கும். ஸுகூன் செய்யப்பட்ட மீமைத் தொடர்ந்து இன்னொரு "மீம் م" வந்தால் அதனை இரட்டிப்பாக்கி 2 அல்லது 3 மாத்திரை அளவு உன்னாவுடன் ஓதுவது الإدغام الشفوي இத்காம் ஷபவிய்யு ஆகும்.

(1x2=2புள்ளிகள்)

04-
- أعظم الله أجرك وأحسن عزائك وغفر لميتك

- ஜனாஸாவின் உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவிக்கும் போது ஓதும் துஆ

(1x2=2 புள்ளிகள்)

05-

a-இமாம் ஷாபி (ரஹ்) அவர்களால் பாடப்பட்டது.

b-காலம் எனக்குக் கற்பிக்கும் போதெல்லாம் அது எனக்கு அறிவின் குறையையே காட்டியது.எனது அறிவு அதிகரிக்கும் போது எனது அறியாமையையே அதிகம் அறிந்து கொண்டேன். **(1x2=2 புள்ளிகள்)**

06-

إذا هبت رياحك فاغتنمها
اطرق الحديد وهو حام

(இவற்றுள் ஒன்று எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்)

07-

மதீனது நுஹாஸ்	நாவல்
பத்ஹுஃத் தையான்	சட்டம்
நூறு மஸாலா	கவிதை நடை இலக்கியம்
சம்சுல் ம.ஃ.ரிபா	மெஞ்ஞானம்

(1/2x4=2புள்ளிகள்)

08-சூரியனும் சந்திரனும் சொல்லும் அப்லாக் அனைத்தும் வாரி எனும் பஹ்ர் அதுவும் வாழ்த்து மெங்கள் பாத்திமத்தே. **(2புள்ளிகள்)**

09-

اللهم أطعم من أطعمني واسق من سقاني

(2புள்ளிகள்)

10-ஜாஹிலிய்யா காலத்தில் க.ஃ.பாவில் தொங்கவிடப்பட்ட ஏழு கவிதைத் தொகுப்புக்கள்

உதாரணமாக

- முஅல்லகது இம்ரஉல் கைஸ்
- முஅல்லகது ஸுஹைர் பின் அபீ ஸலமா
- முஅல்லகது தரபா இப்னு அப்து
- முஅல்லகது லபீத் இப்னு ரபீஆ
- முஅல்லகது அம்ர் இப்னு குல்ஸூம்
- முஅல்லகது அந்தரா இப்னு ஷத்தாத்
- முஅல்லகது ஹாரிஸா இப்னு தல்ஹா

(2 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் (2 x 10 = 20புள்ளிகள்)

2.

i.**தமிழ் மொழிபெயர்ப்பு**

1. நபியே யானைப் படையினரை உங்கள் இறைவன் எவ்வாறு அழியச் செய்தான் என்பதனை நீ கவனித்துப் பார்க்க வில்லையா?
2. அவர்களது சூழ்ச்சிகளை அவன் வீணாக்கி விடவில்லையா?
3. அவர்கள் மீது பறவைகளைக் கூட்டம் கூட்டமாக அனுப்பிவைத்தான்,
4. (கெட்டியான) சுடப்பட்ட சிறிய கற்களை அவை அவர்கள் மீது எறிந்தன.
5. அதனால் அவர்களை அவன் (பறவைகளால்) கொத்தி தின்னப்பட்ட வைக்கோல்களைப் போன்று ஆக்கி அழித்துவிட்டான்.

(1 x 5 = 5புள்ளிகள்)

ii. **சூறா அருளப்பட்ட பின்னணி**

குரைஷிகளால் நபியவர்கள் கடுமையாக எதிர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவருக்கு ஆறுதல் அளிப்பதற்காக, வரலாற்றில் இடம் பெற்ற மிக முக்கியமான நிகழ்வொன்றாகக் காணப்பட்ட ஆப்ரஹாவின் யானைப் படையெடுப்பை நினைவுபடுத்தி அதனை அல்லாஹ் எவ்வாறு அழித்தானோ அது போல முஹம்மத் (ஸல்) அவர்களை எதிர்ப்பவர்கள் எவ்வளவு பெரிய சக்தி கொண்டவர்களாக இருந்தாலும் அவர்களையும் அல்லாஹ் அழிப்பான் என்பதை எடுத்துக்காட்டி, நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காக அருளப்பட்டது.

(இப்பின்னணி சுருக்கமாகத் தரப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

iii. இலக்கிய நயம்

- ஒவ்வொரு வசனத்தின் இறுதியிலும் "லாம்" என்ற எழுத்து இடம் பெற்றுள்ளமை.
- அது ஓசை நயத்திற்கு செழுமை சேர்க்கின்றமை.
- மிக நீண்ட வரலாறு ஐந்து வசனங்களில் சுருக்கமாக முன்வைக்கப்பட்டுள்ளமை.
- மனனமிட இலகுவாக சிறிய சொற் சேர்க்கைகளைக் கொண்டுள்ளமை.
- ஒத்த ஓசை சொற்களைக் கொண்டுள்ளமை
  (تضليل/ أبابيل/ سجيل)
- எளிமையான, சுவைமிகு உவமானம் இடம் பெற்றுள்ளமை.(كعصف مأكول)
- முதலாம் வசனம் தவிர்ந்த ஏனைய அனைத்து வசனங்களிலும் "هم"என்ற பிரதிப் பெயர் வந்துள்ளமை ஓசை நயத்திற்கு இனிமை சேர்க்கின்றமை
  (كيدهم/ عليهم / ترميهم / فجعلهم)

(இவை போன்ற பொருத்தமான இலக்கிய நயம் விளக்கிக் குறிப்பிடப்பட்டிருப்பின் 5புள்ளிகள்)

Iv. கோடிடப்பட்ட சொற்றொடர்களின் தஜ்வீத் சட்டங்கள்

I.

"طيرا أبابيل" என்ற சொற்றொடரில் தன்வீன் செய்யப்பட்ட "ر" வை அடுத்து இழ்ஹாருடைய எழுத்து ஹம்ஸா வந்துள்ளதால் வெளிப்படுத்தி உன்னா இன்றி ஓத வேண்டும்.

II.

"كعصف مأكول" என்ற சொற்றொடரில் தன்வீன் செய்யப்பட்ட "ف" வை அடுத்து இத்ஹாமுடைய எழுத்துக்களில் ஒன்றான م இடம் பெற்றிருப்பதனால் நுழைத்து உன்னாவுடன் ஓத வேண்டும். **(2 ½ x 2 = 5 புள்ளிகள்)**

v. சூரா தரும் படிப்பினைகள்

- அல்லாஹ்வின் வல்லமை எடுத்துக்காட்டப்படுகின்றமை.
- ஆறுதல் அளிக்கின்றமை.
- பெரிய படைப்பலம் கூட சிறிய சக்தியொன்றுக்கு முன்னால் அற்பம் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை.
- நீண்ட வரலாற்றைக் கூட மிகச் சுருக்கமாகச் சுட்டிக்காட்ட முடியும் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை.
  - சூழ்ச்சிகளை அல்லாஹ் முறியடிப்பான் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை.

(இவை போன்ற பொருத்தமான படிப்பினைகள் இரண்டு எழுதப்பட்டிருப்பின் 2 ½ x 2 = 5 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 5 x 5 = 25 புள்ளிகள்)

பகுதி -ii

3. A.

i. கவிதையின் மொழி பெயர்ப்பு

நீங்கள் என் இரட்சகன் பற்றி என்னிடம் கேட்டால் அவனோ அருளாளன் அன்புடையோன்.

நீங்கள் என் நபி பற்றி என்னிடம் கேட்டால் அவரோ மகத்துவம் மிக்க ஒரு மனிதர்.

நீங்கள் என் வேதம் பற்றி என்னிடம் கேட்டால் அதுவோ சங்கைமிக்க அல்குர்ஆன்.

நீங்கள் என் விரோதி பற்றி என்னிடம் கேட்டால் அவனோ எடுத்தெறியப்பட்ட ஷைத்தான்.

நீங்கள் என் தந்தை பற்றி என்னிடம் கேட்டால் அவரோ முயற்சியுள்ள மனிதர்.

நீங்கள் என் நண்பன் பற்றி என்னிடம் கேட்டால் அவரோ நற்குணமுள்ள ஒரு தோழர்.

(மொழிபெயர்ப்புக்கு 5 புள்ளிகள்)

ii. கவிதையின் இலக்கியநயம்

- எளிய மொழி நடையில் அமைந்துள்ளமை.
- சொற் சுருக்கம் கொண்டதாக அமைந்துள்ளமை.
- ஒத்த ஓசைச் சொற்கள் கொண்டு அமைந்துள்ளமை.

سـأـلـتـنـي/ إلـهـي / نـبـيـي / كـتـابـي / عــدوي

- ஒவ்வொரு அடியினதும் முதல் மூன்று சொற்களும் ஒரே விதமாக அமைந்துள்ளமை.
- ஒவ்வொரு அடியினதும் நான்காம் சொல் "ي" வுடன் நிஸ்பத் செய்யப்பட்டுள்ளமை.
- முதல் நான்கு வரிகளிலும் கடைசி எழுத்து "மீம்" என்ற எழுத்தில் முடிவடைந்துள்ளமை.
- ஒவ்வொரு அடியிலும் "نْ!" என ஆரம்பித்து வினா எழுப்பி "فـ" என ஆரம்பித்து விடை அளித்துள்ளமை.
- எல்லா அடிகளிலும் சம எண்ணிக்கையான மற்றும் சம வலுவான சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை.

(இவை போன்ற பொருத்தமான 5 அம்சங்கள் எழுதப்பட்டிருப்பின் 1x5=5 புள்ளிகள்)

B.

i. உரைப்பகுதியின் சுருக்கம்

ஒரு நாட்டுப்புற அறபி ஒருவர் ஹஜ் செய்வதற்காக மக்கா நோக்கிப் புறப்பட்டார். பயணிப்பதற்கான ஓர் ஒட்டகம் அவரிடம் இருக்கவில்லை. அவருடைய பயணமோ நீண்டு அமைந்திருந்தது. இடையில் அவரது பாதணி அறுந்து பயன்படுத்த முடியாமல் போனதால் வெறுங்காலுடன் நடக்க ஆரம்பித்தார். அதனால் அவரது இரு கால்களும் புழுதி படிந்து பெரும் மனநெருக்கடிக்கு ஆளானார். தனது இரட்சகன் தனக்கு அருளிய அருளையெல்லாம் மறந்தவனாய் தனக்கு வாகனம் ஒன்றையாவது வாங்க பணம் இல்லையே என மனம் குமுறினார். மக்கா வந்த அவர் கஃபாவின் வாசல் அருகில் கால்களை இழந்த ஒரு மனிதரைக் கண்டார். இறைவா என்னை மன்னித்து விடு, மறக்கக் கூடாதவைகளை எல்லாம் மறந்து விட்டேன். நீதான் என்னைப் படைத்துப் போசித்து கேள்வி, பார்வை, உடல் பலத்தை அளித்தவன் என தனது தவறுக்காக மன்னிப்புத்தேடி பிரார்த்திக்கலானார்.

(இவ்வாறு சுருக்கமாக எழுதப்பட்டிருப்பின் 5புள்ளிகள்)

ii. உரைப் பகுதி உணர்த்தும் படிப்பினைகள்

- கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதல் வேண்டும்.
- எப்போதும் தனக்குக் கீழ் உள்ளவர்களையே பார்க்க வேண்டும்.
- எந்தவொரு தேவையாக இருந்தாலும் அல்லாஹ்விடமே கேட்க வேண்டும்.
- அல்லாஹ்வின் அருள்களில் ஒரு போதும் குறை காணக் கூடாது.
- சோதனைகளின் போது நிதானம் இழக்காது பொறுமை காக்க வேண்டும்.
- செய்த தவறை உணர்ந்தவுடன் பாவமன்னிப்புக் கேட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்பி விட வேண்டும்.

(மேலுள்ளவை போன்று பொருத்தமான 5 படிப்பினைகள் எழுதப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)

iii. உரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு

- **نعمة الله واسعة** (அல்லாஹ்வின் அருள் விசாலமானது)
- **يجب أن لا أنسى** (மறக்கவே கூடாது)
- **النعمة لاتنسى** (மறக்கக் கூடாத அருள்)

(மேற்போன்ற பொருத்தமான ஒருதலைப்பு எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தம் 5x5=25 புள்ளிகள்)

பகுதி–iii

(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடைஎழுத வேண்டும்)

4.

i.

- தவளை தன் வாயால் கெடும்.
- மனிதனின் சாவு அவனது இரு தாடைகளுக்கும் இடையே உள்ளது.
- ஒருவன் தானாகவே தனது அழிவைத் தேடிக்கொள்வது.

(மேற்போன்ற பொருத்தமான ஒரு மொழிபெயர்ப்புக்கு 3 புள்ளிகள்)

ii. தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். **(3 புள்ளிகள்)**

iii.

- **يضرب للكفئ يفشل في عمل من الأعمال.**
- **مقولة تدل أنه حتى الجواد رغم قوته قد يسقط وينهزم**
- **حتى العالم أيضا يخطأ.**

(மேலுள்ளது போன்று ஒரு கருத்து எழுதப்பட்டிருப்பின் 3 புள்ளிகள்)

iv.
- اسمع جعجعة ولا أرى طحنا
- نسمع جعجعة ولا نرى طحنا

(3 புள்ளிகள்)

v.
- من جد وجد
- ومن زرع حصد
- من سار على الدرب وصل

(இவை போன்ற பொருத்தமான ஒன்று எழுதப்பட்டிருப்பின் 3 புள்ளிகள்)

(03 x 05 = 15புள்ளிகள்)

5.

i. **பிரதான போதனை**

- நல்ல நண்பனைத் தெரிவு செய்து கொள்வதன் மூலம் அவனிடமுள்ள நற்பண்புகள், நல்லொழுக்கங்கள் என்பன எம்மை வந்து சேரும். தீய நண்பனுடன் பழகுவதன் மூலம் அவனிடமுள்ள தீய பழக்கங்கள் நாம் அறியாத விதத்திலேனும் எம்னை வந்து சேரும்.

(மேற்போன்ற வகையில் ஒரு போதனை எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

ii. **கோடிடப்பட்ட சொற்களின் பொருள்**

- நல்ல நண்பன் -الجليس الصالح
- உன்னை வந்தடையவில்லை (உன்னை பீடிக்கவில்லை) - لم يصبك
- அதன் வாடையிலிருந்து – من ريحه
- கொல்லன்- صاحب الكير
- அதன் புகையிலிருந்து- من دخانه

(1x 5 = 5புள்ளிகள்)

iii.
- உவமானம் - கஸ்தூரி வைத்துள்ளவன்-صاحب المسك , கொல்லன்-صاحب الكير
- உவமேயம் - நல்ல நண்பன் -الجليس الصالح , தீய நண்பன்- الجليس السوء
- பொதுத் தன்மை - நன்மை-الخير , தீமை –الشر

(2+2+1=5புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 05 x 03 = 15)

6.

i. துஆக்களின் மொழிபெயர்ப்பு

1. அடக்கஸ்தலங்களிலுள்ள விசுவாசிகளே! முஸ்லிம்களே உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும். அல்லாஹ் நாடும்போது நாங்களும் உங்களுடன் வந்து இணைந்து கொள்ளக் கூடியவர்களாக உள்ளோம்.

2. யா அல்லாஹ்! நீ எளிதாக்கியதைத் தவிர வேறெதுவும் எளிதானதாக இல்லை. மேலும் நீ நாடிவிட்டால் கஷ்டத்தையும் எளிதாக்கிவிடுகின்றாய்.

3. யாஅல்லாஹ், இந்தப் பரிபூரணமான பிரார்த்தனைக்கும் நிலையான தொழுகைக்கும் உரிய இரட்சகனே, முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பிரத்தியேக நெருக்கத்தையும் மிகுந்த அந்தஸ்தையும் வழங்குவாயாக. மேலும் நீ வாக்களித்த "மகாமுன் மஹ்மூத்" எனும் புகழுக்குரிய இடத்தில் அவர்களை எழுப்புவாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதியை மீறுவதில்லை.

(மேலுள்ளவாறு ஏதேனும் இரண்டு மொழி பெயர்க்கப்பட்டிருப்பின் 2 ½ x 2 = 5புள்ளிகள்)

ii. துஆக்களின் சந்தர்ப்பங்கள்:

1. மக்பராவைத் தரிசிக்கும் போது ஓத வேண்டியது.
2. ஒரு காரியம் சிரமமாக அமையும் போது ஓத வேண்டியது.
3. அதானைச் (الأذان) செவிமடுத்த போது ஓத வேண்டியது.

(ஏதேனும் இரண்டு சந்தர்ப்பங்கள் எழுதப்பட்டிருப்பின் (2 ½ x 2 =5 புள்ளிகள்)

iii.துஆவின் இலக்கியநயம்

- ஒத்த ஓசை கொண்ட சொற்கள் கையாளப்பட்டுள்ளமை. (**المسلمين.المؤمنين**).
- இந்த துஆவின் ஆரம்பப் பகுதி இரண்டும் அதன் கடைசிப் பகுதியும் (نْ) என்ற ஓசையில் முடிவடைந்துள்ளமை.
- சொற் சுருக்கம், கருத்துச் செறிவு கொண்டமைந்துள்ளமை.
- **سهل** என்ற சொல் மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளமை ஓசை நயத்திற்கு அழகு சேர்க்கின்றமை.
- வசனங்கள் நெடில் ஓசையில் அமைந்திருப்பதானது ஓசை நயத்திற்கு அழகு சேர்க்கின்றமை.
- எளிய நடையில் அமைந்துள்ளமை.
- துஆவின் ஒவ்வொரு பகுதியும் ஒரே ஓசையில் முடிவடைந்துள்ளமை. **(التامة. القائمة. الوسيلة. الفضيلة)**

(ஏதேனும் ஒரு துஆவுக்குப் பொருத்தமான இலக்கிய நயம் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 05 x 03 = 15)

7. **தரப்பட்டவற்றுள் எவையேனும் மூன்று தலைப்புகளுக்கு சிறு குறிப்பு எழுதப்படட வேண்டும்.**

I. நவீன கால அரபு இலக்கியம்.

● அரபு மொழியைப் பேசும் அரபு சமூகத்தினருக்குரிய, அரபு மொழியில் அமைந்த இலக்கியம் அரபு இலக்கியம் எனப்படுகின்றமை.

● 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து அரபு இலக்கியத்தின் நவீன காலம் ஆரம்பிக்கின்றமை.

● அரபு உலகம் காலனித்துவத்திற்குட்பட்டிருந்த போது அதன் இலக்கியங்கள் கூட தேக்கமடைந்திருந்தன. இவ்வேளையில் சுதந்திரப் போராட்டத்தை மையப்படுத்தி நவீன அரபு இலக்கியங்கள் தோற்றம் பெற்றமை.

● இலக்கியத்தை இலக்கியக் கண்ணோட்டத்தில் ஆய்தல், இலக்கியத்தை இஸ்லாமிய நோக்கில் ஆய்தல் முதலிய கருத்தோட்டங்கள் வளர்ச்சிபெற்றமை.

● மஹ்மூத் அக்காத், தாஹா ஹுஸைன், ஸஈத் பாஷ்சா முதலான முக்கிய இலக்கியவாதிகள் தோன்றியமை.

● எகிப்து, சியா, பலஸ்தீன் போன்ற நாடுகளில் நவீன அரபு இலக்கிய வடிவங்கள் மீளெழுச்சி பெற்றமை.

● நவீன அரபு இலக்கியங்கள் இலகு அரபு மொழியில் ,பிற மொழிகளின் செல்வாக்குட்பட்டதாகவும் அமைந்தமை.

● கதைகள், நாடகங்கள், புதுக்கவிதை வடிவங்கள், சினிமாக்கள் என விரிவடைந்தமை

(இவை போன்ற 5 அம்சங்கள் எழுதப்பட்டிருப்பின் 1x5=5புள்ளிகள்)

II. மக்கி, மதனி வேறுபாடுகள்.

- ஹிஜ்ரத்திற்கு முன்னர் அருளப்பட்ட ஸூராக்கள் மக்கி எனவும் ஹிஜ்ரத்திற்குப் பின்னர் அருளப்பட்டவை மதனி எனவும் அடையாளப்படுத்தப்பதுகின்றன.
- மக்கி ஸூராக்கள் குறுகியதாகவும் மதனி ஸூராக்கள் நீண்டதாகவும் அமைந்துள்ளன.
- அல்குர்ஆனில் மக்கி ஸூராக்கள் 88 உம் மதனி ஸூராக்கள் 26 உம் காணப்படுகின்றன.
- மக்கி ஸூராக்கள் குறுகிய வசனங்களைக் கொண்டதாகவும் மதனி ஸூராக்கள் நீண்ட வசனங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன.
- மக்கி ஸூராக்கள் மனிதர்களே! என்றும் மதனி ஸூராக்கள் ஈமான் கொண்ட விசுவாசிகளே என்றும் விளித்துப் பேசுவதாக உள்ளன.
- மக்கி ஸூராக்கள் நல்லொழுக்கம் தொடர்பான போதனைகளையும் மதனி ஸூராக்கள் சட்டதிட்டங்களையும் உள்ளடக்கியுள்ளன.
- மக்கி ஸூராக்கள் ஏகத்துவம், ரிஸாலத், மறுமை வாழ்வு போன்ற அடிப்படை விடயங்களை வழியுறுத்தக்கூடியதாகவும் மதனி ஸூராக்கள் வணக்க வழிபாடுகள், குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு , சர்வதேச உறவுகள் பற்றி விளக்குவதாகவும் அமைந்துள்ளன.

(இவை போன்ற 5 அம்சங்கள் எழுதப்பட்டிருப்பின் 1x5=5புள்ளிகள்)

III. அரபுத் தமிழ் இலக்கியம்.

- 18 ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலும் இலங்கையிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழ் உச்சரிப்பை அரபியில் எழுதும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.இதனையே அரபுத் தமிழ் என்கின்றோம்.

- அல்குர்ஆனுக்கு அரபு அல்லாத ஏனைய மொழிகளில் விளக்கவுரை எழுதும் போது அதன் கருத்துக்கள் மற்றும் உச்சரிப்புக்கள் சிதைவடைவதனால் அரபு உச்சரிப்பு சிதைவடையாதவாறு அரபுத் தமிழில் எழுதும் மரபு தோன்றி வளர்ச்சிபெற்றது.

- அரபுத்தமிழில் தோன்றிய முக்கிய தப்ஸீர்களாவன தப்ஸீர் பத்ஹுல் கரீம்,தப்ஸீர் பத்ஹுர் ரஹீம்.

- அரபுத் தழிழில் பயன்படுத்தும் எழுத்துக்களின் எண்ணிக்கை 39 ஆகும்.

- அரபுத் தமிழைப் பயன்படுத்திப் பல்வேறு இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றன. அவை நீண்ட காலம் சமூகத்தில் பயன்படுத்தி ரசனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

- தமிழ் இலக்கிய வடிவங்கள் போன்றே அரபுத்தமிழிலும் பல வடிவங்கள் உள்ளன. உதாரணமாக கிஸ்ஸா,நாமா,மஸாலா…

- அரபுத் தமிழ் இலக்கிய வடிவங்கள் உரை நடை,கவிதை நடை, நாவல்கள், மஸாலா எனப் பல் வகைப்படுகின்றன.

- உரை நடை வடிவிலான இலக்கியங்களில் கதீஜா நாயகி சீவிய சரித்திரம், நாளு இமாம் சீவிய சரித்திரம் முதலியன சீவிய சரித்திர இலக்கியத்துக்கு உதாரணங்களாகும்.

- இலங்கை,தென்னிந்தியா போன்ற பகுதிகளில் முஸ்லிம்களிடையே வழக்கிலிருந்த எழுத்து மொழியாக அரபுத்தமிழ் இருந்து வந்துள்ளது.

(இவை போன்ற 5 அம்சங்கள் எழுதப்பட்டிருப்பின் 1x5=5புள்ளிகள்)

iv. إعجاز القرآن

- المعجزة أمرخارق للعادة مقرون بالتحدي.

- إن الله عزوجل أرسل الأنبياء والرسل إلى قومهم بالمعجزات لتأكيد رسالتهم .أما النبي محمد صلى الله عليه وسلم فقد أيده الله بمعجزة خالدة إلى يوم القيامة الا وهي القرآن الكريم.

- ان الله تعالى تحدي كفار قريش وغيرهم أن يأتوا بسورة واحدة مثل سورة القرآن . وهذا من إعجاز القرآن الكريم.

- ان الإعجاز في القرآن عدة أنواع فهناك الإعجاز اللغوي،والعلمي، والتشريعي.

- الأمثلة للإعجاز العلمي في القرآن – نشأة الجنين – نقص الأكسجون.

(இவை போன்ற 5 அம்சங்கள் எழுதப்பட்டிருப்பின் 1x5=5புள்ளிகள்)

٧.

الحديث النبوي.

- هو الحديث الذي قاله النبي صلى الله عليه وسلم.فهو كل قول أوفعل أو تقرير أوصفة خلقية أو خلقية أو سيرة صدرت عنه يعد حديثا نبويا.
- وكل ما صدر عن محمد صلى الله عليه وسلم من قول أو فعل أوتصرف ما هو إلا وحي من الله أو حى به إلى محمد صلى الله عليه وسلم قال الله تعالى وما ينطق عن الهوى إن هو إلا وحي يوحى.
- والحديث النبوي هوالمصدر الثاني والنقلي في الإسلام بعد القرآن.
- إن الحديث النبوي يؤ كد القرآن الكريم كما أنه يبن أحكام القرآن.
- ويجب على كل مسلم أن يفهمه ويتعلمه ويطبقه في الحياة.

(இவை போன்ற 5 அம்சங்கள் எழுதப்பட்டிருப்பின் 1x5=5புள்ளிகள்)
(மொத்தமாக 3 x 5= 15 புள்ளிகள்)

பகுதி 1	45 புள்ளிகள்
பகுதி 11	25 புள்ளிகள்
பகுதி 111	30 புள்ளிகள்
மொத்தம்	100 புள்ளிகள்